பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 25 வியாழக்கிழமை 12.10.2023 கதிர் 335

# சந்திக்க நேரம் ஒதுக்க கேட்டு மோடிக்கு கடிதம் எழுத தயார்

## வெள்ளிக்கிழமை இறுதி முடிவு என்கிறார் விக்னேஸ்வரன்

இந்திய பிரதமர் நரேந்திரமோடியினைச் சந்தித்து தமது நிலைகள் குறித்துத் தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றினை எட்டுவதற்கு வாய்ப்பளிக்குமாறுகோரிஎழுதமிழ்க்கட்சிகள் இணைந்துகடிதம்ஒன்றினைஅனுப்பத் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்றகட்சித்தலைவர்கள்சிலருடனான சநத்திப்பினைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;-

உடனடியாக கடிதத்தினை அனுப்புவதாக இல்லையா என்பது குறித்து எதிர்வரும்வெள்ளிக்கிழமைகூடிஇறுதித் தீர்மானம்எடுக்கவுள்ளோம்.இன்றுசில கட்சிதலைவர்கள்வருகைதராமையின் காரணமாக அந்த முடிவு எட்டப்படவில்லை.

13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைபடுத்தவேண்டிய தார் மீகப் பொறுப்பு இந்தியாவிற்குக் காணப்படுகின்றது.

தற்பொழுது நாட்டின் நிலை ☞ 2

## இது ரகசியம் அல்ல!

திருவிளையாடல் படத்தில் நாகேஸ்க்கும்நடிகர்திலகம்சிவாஜி கணேசனுக்கும் இடையிலான உரையாடல் வெகு பிரபலம். தருமி பாத்திரத்தில் நடித்திருப்பார் நாகேஸ். அவரது பாணியில் பிரிக்க முடியாதது எதுவோ என்று கேட்டால் பல்கலைக்கழுங்களும் பாலியல் லீலைகளும் என்று சொல்லலாம். இதுஒருமிகைப்படுத்தல்வாதம்தான் என்றாலும் கல்விக்கூடம் ஒன்றில் கலவிக் குற்றச்சாட்டுக்கள் பெரிய வெள்ளைத் தாளில் இட்ட கருப்புப் புள்ளி மாதிரித்தான். அவ்வளவு பெரியவெள்ளைத்தாள்இருந்தாலும் கண்ணை என்னவோ அந்தக் கருப்புப்புள்ளிதான் உடன் கவரும்.

பல்கலைக்கழகங்கள் பல பாலியல் குற்றச்சாட்டுக்களைக் கண்டிருக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்காக பலர் தமது பதவி நிலைகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கி ☞ 2

# இணையம் ஊடாக கடன் தரும் போலி செயலிகள் மீது கவனம்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

இணையம் ஊடாக கடன் வழங்கும் போலி செயலிகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டுமென இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இணையம்ஊடாக கடன்வழங்கும் மோசடிகள் அதிகரித்துள்ளன, ☞ 2

# அரசின் பசுமைப் பொருளாதாரத் திட்டத்தில் இணைய தனியார் துறையினருக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

தொழில்நுட்பம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு தனியார்துறையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்த அழைப்பு விடுத்தார்.

தேசிய தகவல் தொழிநுட்பம் மற்றும் வர்த்தக செயல்முறை முகாமைத்துவத்தொழில் கண்காட்சியை முற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ வாரத்தைத் தொடக்கிவைக்கும் முகமாக இந்தக் கண்காட்சி , ஒக்டோபர் 11,12 மற்றும் 13 ஆம் திகதிகளில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

அங்கு தனது உரையில் ரணில் மேலும் தெரிவித்ததாவது:

இக்கண்காட்சியில் பங்கேற்கும் பலர் இதன் மூலம் எவ்வாறு தமது வெளிநாடு செல்லும் ஆசையில் வெற்றி பெறலாம் என்றே எதிர்பார்க்கின்றனர். இது அனைவரினதும்கனவாகும். ஆனால் இக்கண்காட்சி மூலம் நமது நாட்டிற்குஎவ்வாறுபயன் பெறுவது என்பதிலேயே நான் கவனம் செலுத்தினேன்.

இன்று வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற தருணத்தில் நாம் இருக்கிறோம். நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை உருவாக்குவது மட்டும்போதுமானதல்ல. பெற்ற கடனை திரும்பச் செலுத்த வேண்டும். நமக்குத் தேவையான பொருட்களைஇறக்குமதி செய்யவேண்டும். ☞ 2

# இன, மதக் கோடுகளாகவுள்ள பிரிவுகள்

## மவ்பின ஜனதா கட்சியின் புதிய தலைவர் திலித் ஜயவீர தெரிவிப்பு

அரசியல் நலனுக்காகஇனமதகோடுகளாக பிரிந்து கிடக்கும் தாய் நாட்டின் அனைத்துப் பிரிவுகளையும் நாம் கடந்துசெல்லவேண்டும் என்று, மவ்பிம ஜனதா என்கிற கட்சியின் புதிய தலைவராப் பொறுப்பேற்றுள்ள பிரபல வர்த்தகர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

மகிழ்ச்சியானதேசத்தை உருவாக்கும் நோக்கில் இலங்கை அரசியல் வரலாற்றில் புதுமையின் முதல் அடையாளமாக விளங்கும் மவ்பிம ஜனதா கட்சியின்தேசிய தலைமையகம் கொழும்பு, பார்க்அவென்யூ நேற்று கட்சியின்தலைவர்திலித் ஜயவீர தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் மூத்த ☞ 2

# சுகாதார அமைச்சரை உடன் வீட்டுக்கு அனுப்பவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் கொந்தளிப்பு

இந்த ஆட்சி மக்கள் மீது வரிகளைச் சுமத்தி மருந்துப்பொருள் கடத்தல் மூலம் நாட்டுக்கு பெருமளவு பணத்தை இழக்ச்செய்திருக்கிறது. இவ்வாறான கீழ்த்தரமான வேலைகளில் ஈடுபடுவதை விடுத்து இதற்குக் காரணமான சுகாதார அமைச்சரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தரம்குறைந்த மருந்துப்பொ ☞ 8

# தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவது தற்காலிக நிறுத்தம்

இலங்கை பணியாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளைகருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் உள்ள ☞ 10

# அரச நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்த அரசு நடவடிக்கை

இலங்கையில் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மக்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் தொடர் வழிகாட்டுதல்களை தயாரிக்கவும் நடவடிக்கைஎடுக்கப்படும் என்று,வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டியஆட்சி பற்றிய துறைசார்மேற்பார்வைக் குழுவின்தலைவர்ஜகத் குமார தெரிவித்தார்.

இதற்காகஅனைத்து அரச அதிகாரிகள், மக்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத்குமாரகுறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர் களிடம் அவர் இதனைத் ☞ 8

# ஒன்றிணைந்து செயற்பட்டால் ஒத்துழைப்பை மேம்படுத்தலாம்

## இந்து சமுத்திர நாடுகளுக்கு அலி சப்ரி அழைப்பு

ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், முதலீட்டு ஊக்குவிப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும்பாதுகாப்பு,வர்த்தகம் மற்றும் முதலீட்டு வசதி, மீன்பிடி மேலாண்மை, பேரிடர் மேலாண்மை, சுற்றுலா மற்றும் கலாசார பரிமாற்றங்கள், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, நீல பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி ☞ 2

### ரணில் - ஜெய்சங்கர் பேச்சைத் தொடர்ந்து

# இந்தியா – இலங்கை நாடுகள் இடையே 3 அபிவிருத்தி ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் கூட்டத்தில் பங்கேற்க நாட்டிற்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளிவிவ கார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர்நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதிசெயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் இந்திய - இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப் பட்டதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலானஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளும் வகையிலான 3 ஒப்பந்தங்களும்கைசாத்திடப் ☞ 8

### மறைமுக நிகழ்ச்சி நிரல், ஏற்க முடியா கடன், எதுவாயினும்

# ஆபத்துக்கள் எங்கே இருக்கின்றன என தெளிவாக தெரிந்துகொள்வது அவசியம்

## இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கொழும்பில் தெரிவிப்பு

மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களாக இருந்தாலும் சரி, நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்களாக இருந்தாலும் சரி, ஏற்றுக்கொள்ள முடியாத கடன்களாக இருந்தாலும் சரி ஆபத்துக்கள் எங்கே இருக்கின்றன என்பதை நாம் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி. சுப்பிர ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

# வைத்தியர்கள் வீதிக்கு இறங்குவதால் ஏற்படும் பாதிப்புக்கு வெட்கம்கெட்ட ஆட்சியே பொறுப்பு

## சுகாதார அமைச்சு முன் மருத்துவர்கள் நேற்றுப் போராட்டம்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 2000 வைத்தியர்கள் தங்கள் பணிகளை விட்டு வீதிக்கு இறங்குவதால் வைத்தியசாலைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு வெட்கம்கெட்ட இந்த ஆட்சியே பொறுப்பு என்றும் அவர்கள் கண்டித்தனர்.

முறையற்ற வரி விதிப்பு உட்பட தமது சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு கோரிக்கைகளுக்கும்ஆட்சியாளர்கள் உரிய பதிலளிக்கவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

சுகாதார அமைச்சுக்கு முன்பாகக் காலையில் ஒன்றுகூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு பொலிஸார் முதலில் கூறினர். எனினும், வைத்திய அதிகாரிகள் அதற்கு மறுப்பைத் தெரிவித்ததோடு தங்களது நியாயமான கோரிக்கைகளை பொலிஸார் புரிந்து கொள்ள வேண்டும் என்று பதிலளித்தனர்.

இதனையடுத்து, கோசங்களை எழுப்பியவாறு சுகாதார அமைச்சுக்கு முன்பாக போராட்டத்தினை வைத்திய அதிகாரிகள் ஆரம்பித்தனர். எனினும், பொலிஸார் பாடசாலைகள் முடிவுறும் நேரம் ஆகுவதால் அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினார்கள்.

இதனால் இருதரப்பினருக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டு முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து வீதியின் இருமருங்கிலும் நீண்ட நிரலில் நின்றவாறு அவர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அங்கு உரையாற்றி அரச வைத்திய அதிகாரிகள் சங்த்தின் பொதுச்செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்ததாவது:

சுகாதார அமைச்சுக்கள் அமர்ந்திருந்து கதிரைகளை சூடாக்கிக் கொண்டிருக்கும் அதிகாரிகளுக்கு முக்கியமானதொரு செய்தியைச் சொல்வதற்காகவே நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். வேலைகள் இல்லாது நாம் வீதிக்கு இறங்கவில்லை. இங்கு வருகை தராது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சிகளை எடுத்திருந்தோம்.

ஆனால் ஆட்சியாளர்கள் எமது பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலமாக தீர்ப்பதற்கு விரும்பவில்லை. அது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. 2000 வைத்தியர்கள் வீதிக்கு இறங்கும்போது வைத்தியசாலைகளில் ஏற்படும் பாதிப்புக்களை வெட்கமற்ற ஆட்சியாளர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் எதற்காக வீதிக்கு இறங்கினோம்? எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் ஆளும், எதிர்த்தரப்பினருக்கு புரியும் மொழிகளில் எடுத்துரைத்தோம். ஆனால் அவர்கள் எதனையும் பொருட்டாக கொள்ளும் மனோநிலையில் இல்லாமையின் காரணமாகவே நாம் இப்போது வீதிக்கு இறங்கியுள்ளோம்.

சகல வைத்தியர்களுக்கும் நியாயம் வழங்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் நாம் வீதிக்கு இறங்கியதுடன் விடயத்தினை நிறுத்தப்போவதில்லை. இந்த ஆட்சிக்குப் புரியும் மொழியில் கூறத் தயங்கப்போவதில்லை என்றார்.

## இனி இது .....

றார்கள். பின்னர் விசாரணைகளில் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் படவில்லை என்று திரும்பவும் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டும் இருக்கிறார்கள். குற்றச்சாட்டுக்களால் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பாடமே நடத்தாமல் சம்பளம் பெற்ற வர்களும்கூட இருக்கிறார்கள். இப்படிக் குற்றச்சாட்டுக்கள் பலவிதம்.

பொதுவாக கற்கும் மாண விகளுக்கும் கற்பிக்கும் ஆண் விரிவுரையாளர்களுக்கும் இடையிலான பாலியல் பிரச்சினைகள் தான் பெரிதும் கவனத்திற்கு வந்துள்ளன. மாணவிகள் எழுப்பும் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் -இவை வெளியில் தெரியவந்திருக்கின்றன. பாலியல் ரீதியில் ஒத்துழைக்கவில்லை என்பதற்காக பரீட்சைப்பெறுபேறுகளில் கைவைத்தார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களைப் பல்கலைக்கழகம் கண்டுள்ளது.

ஆனால், இப்போது அதைத் தாண்டியும் அடுத்த கட்டத்திற்கு இந்தப் பாலியல் வதைகள் நகர்ந்திருக்கின்றனவோ என்கிற சந்தேகம் எழுந்திருக்கிறது. அண்மையில் நடந்த ஒரு கைது இந்தச் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

வடக்கில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றின் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது. அவர் மீது சுமத்தப்பட்ட பாலியல் முறைப்பாடு காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். முறைப்பாட்டை எழுப்பியிருப்பவர் மாணவி.

கைதாகி இருப்பவரும் சரி முறைப்பாட்டை எழுப்பியிருப்பவரும் சரி இரண்டும் பெரிய இடங்கள். பணம் மற்றும் அதிகாரம் மிக்க தரப்புக்கள். முறைப்பாடு தெரிவித்திருப்பவர் பின்னணியில் நீதி சார்ந்து பெரும் பின்புலம் உள்ளது. குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பவர் பக்கமோ நகைக் கடை உரிமையாளர் ஒருவரின் பெரும் பணப் பின்புலம் உள்ளது.

இதில் மேலும் வேடிக்கை என்னவென்றால், பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் ஒருவரே குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவருக்கு சார்பாக நீதிமன்றத்தில் முற்பட்டு மாணவி தெரிவித்தது பொய்க் குற்றச்சாட்டு என்று தெரிவித்திருப்பதுதான்.

வழக்கமாக இதுபோன்ற விவகாரங்கள் பல்கலைக்கழகத் நிர்வாக மட்டத்திலேயே முறைப்பாடாகவும் விசாரணையாகவும் சமாளிப்புகளாகவும் நடந்து முடிந்துவிடும். ஆனால் இந்த முறை அது பல்கலைக்கழக மதில்களைத் தாண்டி நேரடியாக பொலிஸ் நிலையம் வரை வந்துள்ளது.

பாலியல் ரீதியான சேட்டை, துன்புறுத்தல், முறைகேடுகள் எல்லாமே சட்டப்படி குற்றங்கள்தான் அதற்கு பொலிஸாரை நாடி நீதியை நிலைநாட்டுவதுதான் சரியான வழியும்கூட. இந்த முறைதான் அது நடந்திருக்கின்றது. பார்க்கலாம் இதன் போக்கு எப்படிச் சென்று முடிகின்றது என்று!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும், தமிழ் மக்களது நிலை குறித்தும் 13 இனை அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இந்தியப் பிரதமருடன் பேச விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

கட்சித்தலைவர்கள் அனைவரும் இதற்குச் சம்மதம் தெரிவிக்கின்ற பொழுதுதான் இது முழுமையான செயல்வடிவம் பெறும் - என்றார்.

## இணையம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அந்த நிறுவனங்களுக்கு தங்கள் விவரங்களை வழங்க வேண்டாம். குறித்த மோடி தொடர்பாக கடந்த மாதங்களில் 100 முறைப்பாடுகள் கிடைந்துள்ளது.

நாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளைக் காட்டிலும் குறைவான வட்டி விகிதங்களை வழங்குவதாகவும், ஆவணங்கள் மட்டுமே தேவையென தெரிவிப்பதாலும் மக்கள் கடன் மோசடிகளுக்கு இரையாகிறார்கள்.

5000 ரூபா முதல் 10 இலட்சம் ரூபா வரை குறைந்த வட்டியுடன் கடன் தொகை வழங்கப்படுகிறது. குறித்த நிறுவனங்கள் தாங்கள் வழங்கும் இணைப்பு மூலம் தங்களுடன் பதிவு செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொள்வதோடு, செல்பேசிகளில் தங்களின் செயலியைப் பதிவிறக்க அறிவுறுத்துகின்றன.

அந்தச் செயலி, பயனருடைய கோப்புகள், தொடர்பு எண்கள், அழைப்புப் பதிவுகள் போன்ற கைத்தொலைபேசி ஆதாரங்களை அணுக அனுமதி கேட்கும். அதற்கான அனுமதியை பயனர் கொடுத்தவுடன், பதிவு செய்யப்பட்டுள்ள எண்களை அந்தச் செயலி பெற்றுவிடும்.

இதுபோல் கைத்தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டுள்ள எண்களை அணுகி கடன் செயலிகள், கடன் பெற்றவரை மிரட்டும் நோக்குடன், அவர்கள் கடன் பெற்றுத் திருப்பிச் செலுத்தவில்லை என்ற தகவலை அவர்களுடன் தொடர்புடைய எண்களுக்கு முறைப்பாடு செய்யும்.

அத்தோடு, கடனை செலுத்ததும் வரை அவர்களை தொந்தரவு செய்யும் அதே வேளையில் அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும். எனவே, இதுபோன்ற இணையம் ஊடான கடன்களுக்கு விண்ணப்பிக்க வேண்டாம் என்பதோடு, செயலிகளை பதிவிறக்க வேண்டாம்.

குறித்த செயலியை பதிவிறக்கம் செய்து இருந்தால் கைத் தொலைபேசியை மீட்டமைக்க வேண்டும். அதில் பழைய பயன்பாடுகளை மீட்டெடுக்க வேண்டாம். இந்த செயலி நீக்குவதால் மாத்திரம் தனிப்பட்ட தரவுகளுக்கான அணுகலை தடுக்க முடியாது.

தனிப்பட்ட தரவு பாதுகாப்பின் இரு காரணி அங்கீகாரத்துடன் பதிவு செய்ய வேண்டும். தேசிய அடையாள அட்டைகள், பாஸ்போர்ட் நகல்கள், பிறப்புச் சான்றிதழ் நகல்கள் மற்றும் ஒரு முறை கடவுச்சொற்கள் போன்ற முக்கியமான தனிப்பட்ட மற்றும் நிதி அல்லது வங்கி விவரங்களை தெரியாத நபர்களுடன் மக்கள் பகிரக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஒன்றிணைந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23ஆவது அமைச்சர் மட்ட கூட்டம் 'பிராந்திய கட்டடக் கலையை வலுப்படுத்துதல்: இந்தியப் பெருங்கடல் அடையாளத்தை வலுப்படுத்துதல்' என்ற தொனிப்பொருளின் நடைபெற்றது.

இந்த அமைப்பின் 2023 - 2025ஆம் காலப்பகுதிக்கான தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றதை அடுத்து உரையாற்றும் போதே அயலுறவுத்துறை அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சில ஆண்டுகளுக்குப் பிறகு பல உயர்மட்டப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை இலங்கைக்கு ஊக்கமளிக்கும் விடயமாகும். கடந்த 12 முதல் 18 மாதங்களில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம் மற்றும் மீட்சியில் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் உள்ள நட்பு நாடுகளின் பங்களிப்பும் உள்ளது.

இந்த உத்வேகத்துடனும் உற்சாகத்துடனுமே இலங்கை இந்த அமர்வை நடத்துகிறது.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைத்துவத்தை பங்களாதேஷ் வகித்த காலத்தில் சிறந்த பணியை ஆற்றியமைக்காக எமது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம். கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மிகவும் சவாலான காலகட்டங்களில் பங்களாதேஷ் இந்த பணியை ஆற்றியது.

வரலாற்று ரீதியாக, சர்வதேச விவகாரங்களில் இலங்கை முக்கியப் பங்காற்றியுள்ளது. 1976இல் நாங்கள் வழிநடத்திச் சென்ற அணிசேரா இயக்கத்தின் அமைப்பிற்கு வழி வகுத்த 'பாண்டுங்' மாநாட்டின் ஓர் அங்கமாக இருந்தோம். எனவே, இலங்கையின் அயலுறவுக் கொள்கை பிராந்தியம் மற்றும் அதற்கு அப்பால் அமைதி, உறுதிப்பாடு, பன்முகத்தன்மை ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது.

1971ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் இந்து சமுத்திரப் பகுதியையும் அதன் வான்பரப்பையும் சமாதான வலயமாக பிரகடனப்படுத்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் இலங்கை உலக அரங்கில் அழியாத முத்திரையைப் பதித்தது.

இந்தத் தீர்மானம், அரசியல் எல்லைகள் மற்றும் சித்தாந்தங்களைக் கடந்து, இந்தியப் பெருங்கடலில் பரந்த ஒத்துழைப்பையும் புரிதலையும் ஏற்படுத்தியது. அமைதி, ஒற்றுமை மற்றும் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதில் இலங்கை நீடித்த உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளது.

சவால்களை வெற்றிக் கொள்வதில் சர்வதேச சமூகத்துடன் பணியாற்றுவதற்கான நம்பிக்கையையும் இலங்கை கொண்டுள்ளது. இந்த வரலாற்றுப் பின்னணியில், இந்தியப் பெருங்கடலை ஒட்டிய கரையோர நாடுகளை ஒன்றிணைத்து பிராந்திய ஒத்துழைப்பையும் நிலையான வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்கில், 1997ஆம் ஆண்டு ஸ்தாபக உறுப்பினராக, இந்தியப் பெருங்கடல் ரிம் மன்றத்தில் இலங்கை இணைந்துகொண்டதை பெருமையாக கருதுகிறோம்.

மன்றத்தின் சாசனத்தில் கூறப்பட்டுள்ளபடி, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள பலதரப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்ள ஐஓஆர்ஏ (ஐஓஆர்ஏ) மூலம் எங்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு உள்ளது.

எமக்கு முன்னால் இருக்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை நாம் உணர்ந்து கொள்வது மிகவும் முக்கியம். இந்தியப் பெருங்கடல் பகுதி பல்வேறு சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. இந்தச் சவால்களுக்கு நமது கூட்டு முயற்சிகள் மூலம் தீர்வுகளைக் கண்டறிவதற்கான வலுவான அர்ப்பணிப்புத் தேவைப்படுகிறது.

ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், முதலீட்டு ஊக்குவிப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் முதலீட்டு வசதி, மீன்பிடி மேலாண்மை, பேரிடர் மேலாண்மை, சுற்றுலா மற்றும் கலாசார பரிமாற்றங்கள், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, நீல பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மூலம் நமது பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் உள்ள மக்களின் நிலையான வளர்ச்சி மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த முடியும் என்றார்.

## ஆபத்துக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23ஆவது அமைச்சர் மட்ட கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடல்சார் பொருளாதாரம், வளங்கள், கடல்வழி தொடர்புகள் பாதுகாப்பு அம்சங்களில் நாம் ஒத்துழைப்புக்களைச் செய்ய வேண்டும். மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களாக இருந்தாலும் சரி, நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்களாக இருந்தாலும் சரி, ஏற்றுக்கொள்ள முடியாத கடன்களாக இருந்தாலும் சரி ஆபத்துக்கள் எங்கே இருக்கின்றன என்பதை நாம் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும்.

அனுபவப் பரிமாற்றம், சிறந்த நடைமுறைகளைப் பகிர்தல், அதிக ஒத்துழைப்பு, ஆழ்ந்த விழிப்புணர்வு ஆகியவை தீர்வுகளின் ஒருபகுதியாகும். பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் நாம் முழுமையான ஆதரவுகளையும் இலங்கைக்கு வழங்குவோம். மேலும் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தினை துடிப்பாக செயற்படும் அமைப்பாக மாற்றி, அடுத்து இரண்டு ஆண்டுகளில் அதனை முன்னோக்கி கொண்டு செல்வோம் என்றார்.

## இன, மதக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார மற்றும் ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அங்கு அக்கட்சியின் தலைவர் திலித் ஜயவீர உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த தினம் விசேட தினமாகும். இலங்கை இளைஞர் சமூகம் இலங்கை பெண்கள் மற்றும் அனைத்து இலங்கை மக்களுக்கும் வலுவூட்டும் நோக்கத்தில் மகிழ்ச்சியான ஒரு தொழில்முனைவோர் அரசை உருவாக்குவதற்கான நோக்கத்திற்காக மவ்பிம ஜனதா கட்சியின் தேசிய தலைமையகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நாடு தொழில் முனைவோருக்கு புகலிடமாக மாற வேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் எமது நாட்டில் தொடர்ந்தும் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளுக்குப் பின்னால் இருந்த தேசிய மூலோபாய அணுகுமுறைகளின் பற்றாக்குறையை நிரப்பி உயர் அரசியல் கல்வியறிவு கொண்ட இலங்கை சமூகத்தை உருவாக்க வேண்டும். அந்தப் பங்களிப்பை கொண்ட அரசியல் வெளியை உருவாக்கவே நாம் எதிர்பார்க்கிறோம்.

அரசியல் நலனுக்காக இன மதக் கோடுகளாக பிரிந்து கிடக்கும் தாய்நாட்டின் அனைத்துப் பிரிவுகளையும் நாம் கடந்து செல்ல வேண்டும். ஒரே நாட்டில் ஒரே இதயத்துடிப்பில் அனைவரும் ஒன்றாக நிற்கும் உணர்வை உணரக்கூடிய தேசிய சித்தாந்தம் இருக்க வேண்டும். அந்த உணர்வின் ஊடாக நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் பரஸ்பர அவநம்பிக்கையை போக்குவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைத்திட்டத்தை மவ்பிம ஜனதா கட்சி முன்னெத்து செல்ல தயாராக இருக்கிறது.

காலத்தில் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார வீழ்ச்சியை மீண்டும் ஒரு நம்பிக்கையான திசையில் திருப்புவதற்கு விஞ்ஞான ரீதியான பொருளாதார வேலைத்திட்டம் சமூகமயப்படுப்பட வேண்டும். எனவே தவறான கருத்துக்களின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்குப் பதிலாக இன்னும் உகந்த தீர்வுகள் விவாதிக்கப்பட வேண்டும். இளைஞர் சமூகம் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதன் மூலம் நட்புறவான தொழில்முனைவோரை ஊக்குவிப்பது மற்றும் அந்நிய செலாவணியை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

## அரசின் பசுமைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கும் பணம் செலுத்த வேண்டும். அதற்கான அந்நியச் செலாவணி எம்மிடம் இல்லை. எனவே, நாம் மீண்டும் கடன் பெற வேண்டியேற்படும்.

நாம் கடன் சக்கரத்தில் தொடர்ந்து இருக்கப்போகின்றோமா அல்லது அதிலிருந்து வெளியேறி முன்னேறிச் செல்கிறோமா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். எனவே, இந்த நாட்டில் மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரத்துடன், நாம் உலகச் சந்தைக்கு நகர்ந்து, வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் வருமானத்தை அதிகரித்து மேலதிகக் கையிறுப்பை

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர்
Kalaikkathir

# 3 மணி நேர 'நெஞ்சறை' சத்திர சிகிச்சையில் மன்னார் பொதுவைத்தியசாலை சாதனை



'நெஞ்சறை' சத்திர சிகிச்சை மன்னார் வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

நெஞ்சிலே ஏற்பட்ட பாரிய கத்தி குத்தினால் நெஞ்சுக் குழியினுள் ஏற்பட்ட தொடர் குருதிப்பெருக்கை நிறுத்த சத்திரசிகிச்சை மேற்கொண்டு மன்னார் பொது வைத்தியசாலையில் இளைஞர் ஒருவரின் உயிர் இவ்வாறு காப்பாற்றப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு 35 வயது இளைஞர்ஒருவர்வலதுபக்கநெஞ்சு பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர்உடனடியாகஅவர்சத்திர சிகிச்சை கூடத்துக்கு எடுக்கப்பட்டு வலது பக்க நெஞ்சறையினுள் ஐசி ரியூப் எனப்படும் குழாய் செலுத்தப்பட்டு அவருடைய நெஞ்சுக் குழியினுள் வேகமான தொடர் குருதிப்பெருக்கு இருப்பது இந்நிலையில் அவசரமாக செய்ய வேண்டிய சிரி ஸ்கான் வசதி மற்றும் நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணத்துவ வசதி என்பன மன்னார் வைத்தியசாலையில் இல்லாத காரணத்தால் அந்த நோயாளியை யாழ்ப்பாணம் அனுப்புவதாகமுடிவுஎடுக்கப்பட்டது. ஆனால் அவரை வெலிசறை மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலைக்கு அனுப்புமாறு யாழ்ப்பாண வைத்தியசாலையில் இருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், நோயாளி ஏறக்குறைய 3 லீற்றர் குருதியை இழந்திருந்தார். குருதிப்பெருக்கு மிகவும் வேகமாக இருந்த காரணத்தால் அவரை நோயாளர் அம்புலன்ஸில் பிறிதொரு வைத்தியசாலைக்கு அனுப்புவது அவரது உயிருக்கு மிகவும் ஆபத்தானது என முடிவு செய்யப்பட்டு மன்னார் வைத்தியசாலையிலேயே நெஞ்சறை சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர்எம்.மதுரகீதன்தலைமையிலான சத்திர சிகிச்சை குழுவும் உணர்விழப்பியல் மற்றும் அதிதீவிர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஜூட் பிரசாந்தன் தலைமையிலான குழுவும் இணைந்து சத்திர சிகிச்சையை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

வைத்திய நிபுணர்களால் சரியான தருணத்தில் எடுக்கப்பட்ட முடிவாலும், ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை பிரிவின் திறமை வாய்ந்த அவசர நிலை பராமரிப்பாலும், ஓர் இளைஞனுடைய பெறுமதிமிக்க உயிர் காப்பாற்றப்பட்டது. இந்த சத்திர சிகிச்சையின் போது மன்னார் வைத்தியசாலை குருதி வங்கியின் பங்கு மிகவும் அளப்பரியதாகும்.

மிகப் பெரிய அளவிலான குருதி மாற்றீடு செய்யப்பட்டே இந்த இளைஞனின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. சிரி ஸ்கான் மற்றும் நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணத்துவ வசதி கொண்ட பெரிய வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படும் இந்த சத்திர சிகிச்சை அந்த வசதிகள் இல்லாத மன்னார் வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது மிகவும் சிறப்பான விடயமாக கருதப்படுகிறது. (05)

# நாடாளுமன்ற தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்

## மரிக்கார் எம்.பி. சூளுரை



நாடாளுமன்றத் தேர்தலை பிற்போடும் நோக்கத்துடன் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அமைச்சரவை பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கு ஒருபோதும் தாம் இடமளிக்கப் போவதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அந்த கட்சியின் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் அங்கு மேலும் குறிப்பிடுகையில் -

நாடாளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அமைச்சரவையில் யோசனையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு செயற்படுகின்றார். நாடாளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் அரசமைப்பில் மாற்றங்கள் அவசியமாகும். அதற்கு மூன்றில் இரண்டுபெரும்பான்மைஅவசியமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேவைக்கேற்ப தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. இதற்குள் சிக்கி எவரும் தமது அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கி விடாதீர்கள். தற்போது பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக்களமிறங்க முடியாது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியும்.

எனவே, இதன் ஊடாக பஷில் ராஜபக்ஷவை நெருக்கடிக்குள்ளாக்கி பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு வேட்பாளராவதே ரணிலின் திட்டமாகும்.

அதேபோன்று இதனை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் யாப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுத்து வருகின்றார். அவர் எவ்வாறான தந்திரங்களை முன்னெடுத்தாலும் நாம் நாடாளுமன்றத்தில் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு இடமளிக்கப் போவதில்லை. எவ்வாறிருப்பினும் அரசமைப்பிற்கமைய ஜனாதிபதித் தேர்தலை ஒருபோதும் அவரால் காலம் தாழ்த்த முடியாது. அடுத்த வருடம் ஓகஸ்ட்டில் நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

பொதுஜனபெரமுனவில் பலர் எம்முடன் இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் நிச்சயம் அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனு தாக்கல் செய்வர். பகிரங்க ஊடகத்தில் எம்மால் இதனைக்கூற முடியாது. எனினும் நாடாளுமன்றத்தில் கேட்டால் கூறுவோம். மக்கள் ஆணையை எவராலும் பலவந்தமாகக் கோர முடியாது. என்றார். (05)

# தென்னையிலிருந்து விழுந்து 4 பிள்ளைகளின் தந்தை சாவு

தென்னை மரத்திலிருந்து விழுந்து, நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். புத்தூர் கிழக்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த நபர் கடந்த 6 ஆம் திகதி, தென்னை மரத்தில் சீவல் தொழில் செய்வதற்காக ஏறிய நிலையில் வழுக்கி கீழே விழுந்ததுள்ளார்.

இந்நிலையில், அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் செவ்வாய்க்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)



# ஓட்டோவில் பயணித்தவர் மீது காரில் வந்தோர் துப்பாகிச் சூடு

அஹுங்கல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகம் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பயணித்த நபர் ஒருவரை காரில் வந்த சிலர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மனித கடத்தல் குற்றச்சாட்டு சீனப் பிரஜை ஒருவர் கைது

## பத்தரமுல்லையில் சம்பவம்

தாய்லாந்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி மியன்மார் மற்றும் லாவோஸுக்கு சட்டவிரோதமான முறையில் ஆள்களை அழைத்துச் சென்று மனிதக் கடத்தலில் ஈடுபட்ட சீன பிரஜை ஒருவர் பத்தரமுல்லை பிரதேசத்தில் மனித கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

59 வயதான சீன பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தில் கணினி தரவு உள்ளீடு மற்றும் வாடிக்கையாளர் சேவை நிறுவனங்களில் வேலை வழங்குவதாகத் தெரிவித்த இலங்கையர்கள் பலரிடமிருந்து பல கோடி ரூபாவை பெற்றுக் கொண்டு இந்த மனித கடத்தலை மேற்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கிடைத்த தகவலுக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என மனித கடத்தல், கடத்தல் விசாரணை மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# அரசியல் வங்குரோத்து நிலையை ஏற்படுத்த அரசு முயற்சிக்கின்றது

## சரித ஹேரத் சாடல்

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தை மறுசீரமைத்து நாட்டில் அரசியல் வங்குரோத்து நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

தேர்தலை பிற்போட்டால் எதிர்மறையான தாக்கங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என சுதந்திர மக்கள் சபையின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் தேர்தல் மற்றும் ஜனநாயக மரபுரிமைகளைப் பாதுகாப்பது பெரும் போராட்டமாக உள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அச்சமடைந்து செய்த சட்ட திருத்தத்தால் மாகாண சபைத் தேர்தல் பல ஆண்டுகாலமாக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகம் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் முறையற்ற செயற்பாடுகளால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு வலுபெற்றுள்ள நிலையில் எதிர்வரும் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளில் முயற்சிக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தியமைக்கும் வகையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நிச்சயம் நடத்த வேண்டும் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்கு எதிராக அரசாங்கம் செயற்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை முடக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தை மறுசீரமைத்து நாட்டில் அரசியல் வங்குரோத்து நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. தேர்தலை பிற்போட்டால் எதிர்மறையான தாக்கங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## போகாத ஊருக்கு வழி

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணை ஒன்று பன்னாட்டின் இறுக்கமான அவதானிப்பு மற்றும் கண்காணிப்பின் கீழ் நடத்தப்படவேண்டும்என்று இலங்கைகத்தோலிக்கத் திருச்சபை வலியுறுத்தியுள்ளதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இது தொடர்பில் திருச்சபை, அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்தில் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் மற்றும் ஆயர்கள் பலர் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் கடிதத்தின்படி, உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் காணப்பட்ட குறைபாடு எதுவும் இல்லாமல் முழுமையானதொரு உள்நாட்டு விசாரணையே நடத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னையவிசாரணைகள்பல முக்கியபிரச்சினைகளைக்கவனிக்காமல்விட்டுள்ளன என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கூட்டாட்சி (சமஷ்டி) புலனாய்வு அமைப்பான எவ்பிஐயினால் கையளிக்கப்பட்ட கணினியின் தனி அடையாள எண் (ஐபி அட்ரஸ்) குறித்து எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்றும் திருச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. சொனிக் சொனிக், அபு ஹிந்த போன்றவர்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பதையும் கடிதம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபோன்ற பின்னடைவுகள் இருப்பதால் ஒரு முழுமையான விசாரணை, குறைபாடுகள் ஏதும் இல்லாது நடத்தப்படவேண்டும் என்றும் அந்த விசாரணைகள் சுயாதீனமான பன்னாட்டுக் கண்காணிப்பாளர்களால் கட்டாயம் கண்காணிக்கப்படவேண்டும் என்றும் கடிதம் வலியுறுத்தியுள்ளது.

முதலில்பன்னாட்டுவிசாரணைநடத்தப்படவேண்டும் என்றும், அத்தகைய விசாரணையைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறிவந்த திருச்சபை இப்போது உள்நாட்டு விசாரணையே போதும் அதை பன்னாட்டு சுயாதீனக் கண்காணிப்பாளர்கள் கண்காணித்தால் போதும் என்றும் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஜேர்மனுக்குச் சென்றிருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு வைத்து எந்தவொரு விடயத்திற்காகவும் பன்னாட்டு விசாரணைகள்நடத்தப்படாதுஎன்றுதெரிவித்திருந்த பின்னணியில், திருச்சபையின் இந்த மாற்றம் முக்கியத்துவம் மிக்கதாக இருக்கின்றது.

ரணிலைப் பொ–றுத்தவரையில் திருச்சபை ஒரு விடயத்தை நன்கு புரிந்துகொள்ளவில்லை என்று தெரிகின்றது. ரணில் வாக்குறுதியளித்தாலே அதை நிறைவேற்றாத மனிதர். தமிழர்கள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அவர் வழங்கிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான கலப்புப் பொறிமுறையையே நடைமுறைப்படுத்தாத மனிதர். ஐ.நா.வில் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுவிட்டு, தனது பதவிக் காலம் முடிவடையும்போது இத்தகைய கலப்புப் பொறிமுறைகளோ பன்னாட்டு விசாரணைகளோ இலங்கைக்குப்பொருத்தமற்றவைஎன்றுசொன்னவர்.

அதுமட்டுமல்லமனித உரிமைமீறல்கள்தொடர்பில் உள்நாட்டு விசாரணைகள்தான் நடத்தப்படும் என்று சொன்னவர். ஆனால், இதுவரையில் அத்தகைய உள்நாட்டு விசாரணையைக்கூட அவர் நடத்தியதில்லை. அதனை நடத்துவதற்கான முனைப்பையும்காட்டியதில்லை. அப்படிப்பட்டரணிலை நம்பி, பன்னாட்டுக் கண்காணிப்பாளர்களுடன் கூடிய உள்நாட்டு விசாரணை போதும் என்று திருச்சபை கூறுவது போகாத ஊருக்கு வழி தேடும் கதைதான்.



# இந்தியாவுக்கான கப்பல் பயணம் கனவுதானா?

நடராசா லோகதயாளன்

காங்கேசன்துறையில் இருந்து நாகை பட்டினத்திற்கான பயணிகள் கப்பல் சேவை இலங்கை மக்கள் இடையே குறிப்பாகத் தமிழ் மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அவர்கள் ஆர்வத்தோடு காத்திருந்தார்கள். இப்போது , கப்பல் சேவை அனேகமாகத் தொங்கிவிட்டது. ஆனால் அது- மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்தி செய்திருக்கிறதா?

காங்கேசன்துறை- நாகை பட்டினம் இடையேயான பயணிகள் கப்பல் சேவையின் வெள்ளோட்டம் ஒக்டோபர் 8 இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பயணிகள் சேவை ஒக்டோபர் 10 இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர் 12 தொடங்கும் என்றனர். ஆனால் அதுவும் பிற்போடப்பட்டுள்ளது. ஒக்டோபர் 14 தொடங்கக்கூடும் என்று தெரிகின்றது. ஒக்டோபர் 12 இலங்கையின் கப்பல்துறை



அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வாவுக்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட வேறு நிகழ்வுகள் இருப்பதன் காரணமாகவே நிகழ்வு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது என்று தெரிகின்றது.

இந்தப் பயணிகள் சேவையில் பயணிப்பதற்கு நாகை பட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிப்பதற்கு இதுவரை 36 பேரும் காங்கேசன்துறையில் இருந்து பயணிக்க 15 பேரும் மட்டுமே பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவுக்கான கப்பல் சேவைஇடம்பெற்றால்ஒருதடவை தமிழ்நாட்டுக்குச் சென்றுவரலாம் என்று ஆர்வத்துடன் பலர் இருந்தும் ஏன் கப்பல் பயணத்துக்கான பதிவுகள் இவ்வளவு குறைவாக இருக்கின்றன?

காங்கேசன்துறையில் இருந்து இந்தியாவுக்கு இதற்கு முன்னர் எந்தக் காலத்திலும் பயணிகள் கப்பல் சேவை இடம்பெற்றதே கிடையாது. இது முற்றிலும் புதிய பாதை புதிய பயணம். இதற்கு முன்னர் இராமேஸ்வரத்திற்கும் தலை மன்னாருக்கம் இடையில் கப்பல் சேவை இடம்பெற்றிருக்கின்றது. இராமானுஜம் என்ற பெயரில் அந்தக் கப்பல் சேவை இடம்பெற்றதாக மூத்தோர் பலர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காங்கேசன்துறை வழித்தடத்தில் இந்தப் பயணம் புதியது.

மக்கள் உடனடியாக இந்தக் கப்பல் சேவை மீது ஆர்வம் காட்டாமைக்கு இதுவொரு காரணமாக இருக்கலாம் என்றாலும், கப்பல் கட்டணம் அதிகமாக இருப்பதும் - வான் வழிப் பயணத்திற்கு நிகராக கட்டணம் இருப்பதும் - முக்கியமான காரணமாக இருக்கின்றது.

பலாலியில் இருந்து சென்னைக்கு இடம்பெற்றுவரும் பயணிகள் விமான சேவையில் இரு வழிக் கட்டணமாக 60 ஆயிரம் ரூபாய் வரையிலேயே அறவிடப்படுகின்றது. அதேசமயம் இ;தப் புதிய கப்பல் சேவைக்கு 53 ஆயிரத்து 500 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது இன்னும் கொஞ்சம் காசைக் கொடுத்து சொகுசாகவும் விரைவாகவும் சென்னையைப் போய்ச்சேர்ந்துவிடலாம் என்கிற எண்ணத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது.

ஒரு மணிநேரமும் 30 நிமிட நேரத்தில் வான் வழி- யாக சென்னைக்கே போய்ச் சேர்ந்துவிடலாம். ஆனால் கப்பல் சேவையில் நாகைக்குச் செல்வதற்கே 4 மணி நேரம் பிடிக்கும். பின்னர் நாகையிலிருந்து சென்னைக்குச் சென்று சேரவேண்டும். ஆகமொத்தத்தில் சென்னையை அடைய அரை நாள் பிடிக்கும்.

இவையெல்லாம் மக்கள் இந்தச் சேவையில் ஆர்வம் காட்டாமைக்கான காரணங்களாக இருக்கலாம். தற்போது இந்தச் சேவையில் 150 பயணிகளை மட்டும் ஏற்றிச் செல்லக்கூடிய கப்பலே சேவையில் ஈடுபடுகின்றது. இதற்குப் பதிலாக 250 பயணிகளுடன் 2 மணி நேரத்தில் நாகையை அடையக்கூடிய கப்பலும் இருக்கின்றது. அந்தக் கப்பல் சேவையைத் தொடக்கும் போது கட்டணம் குறைவதற்கும் பயண நேரம் சுருங்குவதற்கும் மேலதிக பொதிகளை எடுத்துச் செல்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படும். அத்தகைய நிலையில் கப்பல் சேவையை நாடும் பயணிகளின் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. .

இவை தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளையிடம் பேசியபோது, இலங்கை இந்தியா இடையிலான போக்குவரத்து அதிகரிப்பது தமிழ் நாட்டுடனான உறவையும் அதிகரிக்கும் என்றார்.

"1940றகு முன்னர் இலங்கையிலேயே இரண்டாவது பெரிய துறைமுகமான ஊர்காவற்றுறை துறைமுகத்தின் ஊடாக கப்பல் சேவை இடம்பெற்றது. இதேநேரம் கட்டணம் ஓர் பெரிய தொகையாகவே காணப்படுகின்றது. இருந்தபோதும் கொண்டு வரும் பொதியின் அளவு அதிகம் என்பதனால் பயணிகளிற்கும் நட்டம் ஏற்படாது" என்றார்.

இதேநேரம் குடாநாட்டின் பிரபலதனியார்வைத்தியசாலை மற்றும் மருந் தக உரிமையாளரான சி.குலேந்திரராஜா கருத்து தெரிவிக்கையில், ''தற்போதைய சூழலில் வர்த்தக நோக்கில் அடிக்கடி பயணிக்கும் எம்போன்ற வர்த்தகர்களிற்கு கப்பல் சேவை வரப்பிரசாதமாகவே அமையும். இருப்பினும் பருவகால மழை காலம் மற்றும் பயணிகள் இன்மையால்இச்சேவைதடைப்படாது தொடருமாயின்நேர விரயம், தூரம் போன்றவற்றைக் கருத்தில்க் கொண்டால் எம்போன்ற வர்த்தகர்கள் இங்கிருந்து விமானத்தில் சென்று இந்தியாவில் இருந்து திரும்பும்போது கண்டிப்பாக கப்பல் சேவையினை நாடுவார்கள்'' என்றார். இதேநேரம் சங்கானையைச்சேர்ந்த கட்டடத் தொழிலாளியான 47 வயது ஜீவரஞ்சன் கருத்து தெரிவிக்கையில், "கப்பல் தொடர்பான செய்திகள் வெளிவந்தபோது இரு வழிக் கட்டணம் 19 ஆயிரம், 20 ஆயிரம் இருக்கும் என்றே கூறப்பட்டது. அப்படியிருந்தால் என்னைப் போன்ற தொழிலாளர்களும்கூட ஒரு தடவை தமிழ்நாட்டில் உள்ள கோயில்களுக்கெல்லாம்போய்வரலாம் என்று நினைத்தேன். எமது பிள்ளைகளிற்கும் இந்தியாவை ஒருமுறையாவது காட்ட முடயும் என நம்பினோம். ஆனால் அது எந்தக் காலத்திலும் இனி இல்லை என்றுதான் தோன்றுகின்றது. கப்பல் கட்டணமும் விமானக் கட்டணம் அளவுக்கு இருந்தால் எங்களைப் போன்றவர்களுக்கு இந்தியப் பயணம் என்பது கனவுதான்" என்றார்.

கப்பல் கட்டணத்தைக் கேட்ட உடனயே தனது வீட்டில் உள்ளவர்களும் உறவுகளும் ஏக்கப் பெருமூச்சே விடுகின்றனர் என்றார் அவர்.

# நசீர் அஹமட்டுக்கு எதிராக உயர் நீதிமன்று வழங்கிய தீர்ப்பு வேறு யாரையும் பாதிக்காது

## லக்ஷ்மன் விஜயமான்ன அடித்துக் கூறுகிறார்






அமைச்சர்நசீர்அஹமட்டுக்குஎதிராகஉயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் தீர்ப்பு வேறுயாருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தப்போவதில்லை. நீதிபதிகளின் வழக்கு தீர்ப்பில் அது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின்முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் லக்ஷ்மன் விஜயமான்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அமைச்சர்நசீர்அஹமட்டுக்குஎதிராகஉயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் தீர்ப்பு வேறுயாருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தப்போவதில்லை. ஏனெனில் நசீர் அஹமட்டுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பாக அவர் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. நீதிமன்றத்துக்கு பதில் அளிக்காமல் காலம் கடத்தி வந்திருக்கிறார். அதன் பிரகாரமே வழக்கு தீர்ப்பு இவ்வாறு வழங்கப்பட்டிருக்கிறது என உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் 5 பக்கங்களைக்கொண்ட தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நசீர் அஹமட்டுக்கு எதிராக குற்றச்சாட்டு தெரிவித்து அவருடைய கட்சி வழக்கு தாக்கல் செய்திருக்கும்போது, அது தொடர்பில் தனது நியாயத்தைத் தெரிவிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆனால் நசீர் அஹமட் அதனைச் செய்யத் தவறி இருக்கிறார். அதன் காரணமாகவே அவருக்குஎதிராகஅவரதுகட்சிஎடுத்த தீர்மானம் சரி எனத் தெரிவித்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

அதனால் நசீர் அஹட்டுக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கும் தீர்ப்பு, ஏனைய கட்சி மாறியவர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை. என்றாலும் நசீர் அஹட்டுக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருத்தம் என ஒரு சிலர் தெரிவித்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை. - என்றார்.(05)

# பாடசாலை மாணவர்களிடையே வேகமாகப் பரவும் கண் நோய்

## எச்சரிக்கும் வலயக் கல்வி அலுவலகம்

கொழும்பு கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் வேகமாக பரவி வருவதாக வலயக் கல்வி அலுவலகம் எச்சரித்துள்ளது.

கொழும்பு பிராந்திய பணிப்பாளர் பி.ஆர். தேவபந்து, அனைத்து பாடசாலைஅதிபர்களுக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளதுடன் கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் உடனடியாக மருத்துவ அதிகாரிக்கு தகவல் தெரிவித்து பரிந்துரைகளை பெற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும்பாடசாலைகளில் கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருந்தால் அவர்களை மற்ற மாணவர்களிடமிருந்து வேறாக்கி தனித்தனியாக வைக்க வேண்டும் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இவ்வாறு கொட்டாஞ்சேனை பகுதி பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(05)

# மாளிகாகந்த நீதிவான் நீதிமன்று அருகில் துப்பாக்கிப் பிரயோகம்

## 3 சந்தேகநபர்கள் கைது



கடந்த செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி மருதானை - மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் பிரதான துப்பாக்கிதாரி உள்ளிட்ட 3 சந்தேக நபர்கள் இராஜகிரிய ஒபேசேகரபுரவில் வைத்துவிசேடஅதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 வயது சிறுமி உயிரிழந்துள்ளதுடன் சிறுமியின் தந்தை படுகாயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டை நிவர்த்திசெய்ய பாதீட்டில் நிதி ஒதுக்கீடு

## கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு




நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைஅமைப்புகளிலும், அதிபர் மற்றும் நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கும்,ஆசிரியர்-அதிபர் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், நிலுவைசம்பளத்தைவழங்கு-வதற்கும் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கீடுகள்கோரப்பட்டுள்ளன என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலை தொழில்முனைவோர் தோட்டக்கலை நிகழ்ச்சித் திட்டத்தின் விவசாயக் கண்காட்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் நிலவும் அதிபர் மற்றும் நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கும், ஆசிரியர்- அதிபர் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், நிலுவை சம்பளத்தை வழங்குவதற்கும் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளனஎனஅமைச்சர் சுசில்பிரேம்ஜயந்ததெரிவித்தார்.

கல்வி அமைச்சு, மாகாண கல்வி, விவசாயம் மற்றும் சுகாதார அமைச்சு, வடமாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலகம்,ஆளுநர்அலுவலகம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் ஆதரவுடன் வடமாகாணத்தில் 150 பாடசாலைகளை இலக்கு வைத்து தொழில்முனைவோர் பாடசாலை தோட்டக்கலை ஆரம்பிக்கப்பட்டது.

தொழில்முனைவோர் பாடசாலை தோட்டக்கலை வெற்றியடைந்துள்ளதுடன் முயற்சிகள் அமைச்சர் தலைமையில் மல்லாவி மத்திய கல்லூரியை மையமாக கொண்டு ஆரம்பமாகி இன்று நிறைவடையவுள்ளது.

விவசாய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய தொழிநுட்ப அறிவு விவசா-யிகளுக்கு வழங்கப்படுவதுடன் விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்க ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

இந்தக் கண்காட்சியை பத்தாயிரம் பள்ளி மாணவர்கள் பார்வையிட வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன், அந்த குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியை வெற்றியடையச் செய்யும் முகமாக 87 பாடசாலைகளுக்கு 150,000 ரூபா காசோலைகள் அமைச்சர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கன் திலீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (05)

# இலங்கைக்கு கடன் கழிவு வழங்குவது குறித்துச் சீன அரசு ஆராயவேண்டும்

## பிலிப்பைன்ஸ் நிதியமைச்சர் கூறுகிறார்



இலங்கைக்கு கடன்மன்னிப்பை வழங்குவது குறித்து சீனா ஆராயவேண்டும் என பிலிப்பைன்ஸ்வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக விரக்தியடையாமல் சவால்களை எதிர்கொள்ளவேண்டும் என பிலிப்பைன்சின் நிதியமைச்சர் பெஞ்சமின் ஈ டியோகோனோ தெரிவித்துள்ளார்.

கொவிட் பெருந்தொற்றின் பின்னர் பிலிப்பைன்ஸ் எதிர்கொண்ட பொருளாதார சவால்களை நினைவுகூர்ந்துள்ள அந்த நாட்டின் நிதியமைச்சர், வலுவான கட்டமைப்பு சீர்திருத்தங்களே நாடு மீண்டும் வலுவான நிலைக்கு வருவதற்கு உதவியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு கடன்மன்னிப்பை வழங்குவது குறித்து சீனா ஆராயவேண்டும் இல்லாவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் பலவீனமாகவே காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது முன்னர் இடம்பெற்றுள்ளது தற்போதும் அதனை செய்யலாம் என குறிப்பிட்டுள்ள அவர், இலங்கை தனது வளங்களை திரட்டுவதை மதிப்பீடு செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனை செய்தால் இலங்கையால் சர்வதேச நிதியமைப்புகளின் உதவிகளைப் பெறுவது இலகுவாக அமையும் எனவும் பிலிப்பைன்ஸ் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.(05)

# நைலோன் கயிற்றால் கழுத்தை இறுக்கி பூந்தொட்டியால் தாக்கி பெண் கொலை

## பேருவளை சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது

நைலோன் கயிற்றால் கழுத்தை இறுக்கி, பூந்தொட்டியால் தலையில் தாக்கிபெண்ஒருவரைக்கொலைசெய்த சம்பவம்தொடர்பில்சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

7நாள்களுக்குமுன்னர்இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை, பரஹெட்டிமு-ல்ல பிரதேசத்தில் வசிக்கும் 75 வயதான பெண்ணே கொலை செய்-யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் குறித்த வீட்டில் பணி செய்தவர் எனத் தெரிய வருகிறது. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

# ஒக்ரோபர் முதல் வாரம் 26,000 அதிக சுற்றுலாவிகள் வருகை

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தின் முதல் வாரத்தில் 26 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, ஒக்ரோபர் மாதத்தில் இதுவரை 26 ஆயிரத்து 272 வெளிநாட்டு பிரஜைகள் இலங்கை தீவுக்கு வருகை தந்துள்ளனர்.

ஒக்ரோபர் மாதத்தில் 6 ஆயிரத்து 293 இந்திய நாட்டு பிரஜைகள் வருகை தந்திருப்பதாகவும் இதனால் இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ளது.

மேலும், ரஷ்யா நாட்டில் இருந்து 2 ஆயிரத்து 352 நபர்களும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஆயிரத்து 904 பேரும், சீனாவில் இருந்து ஆயிரத்து 900 பேரும், ஜெர்மனியில் இருந்து ஆயிரத்து 679 பேரும், ஆஸ்திரேலியாவில் இருந்து ஆயிரத்து 307 சுற்றுலாப் பயணிகளும் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை ஒரு லட்சத்து 042 ஆயிரத்து 528 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (05)

# மட்டு. வவுணதீவில் விபத்தில் படுகாயமடைந்துள்ள உப பொலிஸ் பரிசோதகர் சிகிச்சை பயனின்றி சாவு

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட உபபொலிஸ் பரிசோதகர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று (புதன்கிழமை) அதிகாலையில் உயிரிழந்துள்ளார்.

மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்தில் நீதிமன்ற பிரிவில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்த நாற்குடா பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான உபபொலிஸ் பரிசோதகர் சபேசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த சனிக்கிழமை வவுணதீவிலுள்ள தனது பண்ணைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டதையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து, அவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவரின் இறுதிகிரியை பொலிஸாரின் மரியாதையுடன் இன்று (வியாழக்கிழமை) இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# அஹுங்கல்லவில் 2 குழுக்களிடையே அசிட் வீச்சு, கூரிய ஆயுதத் தாக்குதல்

## 6 பேர் காயம்

அஹுங்கல்ல பதிராஜகமவில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின்போது அசிட் வீச்சு மற்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர் என அஹுங்கல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) பகல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் இரு குழுக்களையும் சேர்ந்த தலா மூன்று பேர் என ஆறு பேர் காயமடைந்துள்ளனர் எனவும், அவர்களில் மூன்று பெண்களும் அடங்குகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு தரப்பினரின் வாள்வெட்டுத் தாக்குதலில் மற்றைய தரப்பைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனவும், இதனையடுத்து மற்றைய தரப்பினர் மேற்கொண்ட அசிட் வீச்சு மற்றும் தாக்குதல்களால் ஐவர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# காதலியின் அந்தரங்கப் படங்களை வீட்டு வாசலில் ஒட்டிய காதலன் கைது

தனது காதலியின் அந்தரங்க புகைப்படங்களை பழிவாங்கும் நோக்கத்தில் காதலியின் வீட்டு வாசலில் ஒட்டிய காதலனை கெஸ்பேவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மஹரகம பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 23 வயதுடைய இளைஞர் ஆவார்.

இந்த இளைஞனின் வீட்டை சோதித்த போது குறித்த பெண்ணின் மேலதிக நான்கு நிர்வாண புகைப்படங்கள் மற்றும் அந்த நிர்வாண புகைப்படங்கள் உள்ள அவரது மடிக்கணினியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன், பெண்ணின் பாடசாலை நண்பராக இருந்தார் எனவும், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இருவரும் நெருக்கமான உறவை ஆரம்பித்துள்ளனர் எனவும் பின்னர் இருவரும் நெருக்கமாக இருந்த நேரங்களில் பெண்ணின் நிர்வாணப் புகைப்படம் எடுக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் கடந்த சிறுகாலமாக இந்த இளைஞனின் பல்வேறு செயற்பாடுகளை அவதானித்து அவ்இளைஞருடனான உறவை துண்டிக்க முடிவெடுத்த நிலையில் அந்த இளைஞனை தவிர்த்துள்ளார். இதனை அவதானித்த இளைஞன் தன் காதலியை பழிவாங்கும் நோக்கத்தில் இந்த குற்றத்தை செய்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அமைச்சர் ஜீவன் ஜெனிவா பயணம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சுவிஸ் தலைநகர் ஜெனிவாவுக்கு நேற்று (புதன்கிழமை) பயணமானார்.

உலக நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் ஜெனிவா செல்கின்றார். ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையே இந்தக் கூட்டம் நடைபெறும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும், பெருந் தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்கவும் அமைச்சருடன் செல்கின்றனர்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளரையும் இவ்விஜயத்தின்போது சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

'மலையகம் - 200' நிகழ்வு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (07)

## அரச நிறுவன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களின்போதும் பெரும்பாலும் மாற்றுத் திறனாளிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் தடைகளின்றி தமது வாக்குகளை அளிக்கக்கூடிய வகையில் எதிர்காலத்தில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களின் போதும் மாற்றுத் திறனாளிகளுக்காக விசேட அடையாள அட்டை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். வாக்களிக்கப் பயன்படுத்தப்படும் மையை இறக்குமதி செய்வதற்கு அதிகப் பணம் செலவாகின்றது.

தற்போது தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் வாக்களிப்பில் முறைகேடுகளை செய்ய முடியாது. எனவே, தேர்தலுக்கான செலவினங்களைக் குறைப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரைத்துள்ளது.

தற்போது மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதில்லை. அதனால் பொதுமக்கள் தமக்கு அவசியமான சேவைகளை பெற்றுக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கின்றனர். மேலும் முறையற்ற விதத்தில் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படுவதாக கடந்த காலங்களில் பொதுமக்களால் பல்வேறு விமர்சனங்களும் இந்த மாகாண சபைகள் மீது சுமத்தப்பட்டன.

அரச நிதி வீணடிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. எனவே, எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்கு நிதி வழங்குவதற்கு முறையான புதிய வேலைத்திட்டம் ஒன்று அவசியமாகின்றது. அது தொடர்பில் எமது குழு கலந்துரையாடி வருகின்றது.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்சியை உருவாக்குவதற்காகவும் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் அனைத்துத் தரப்பினரினதும் ஆலோசனைகளுடன் கூடிய வழிகாட்டல்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்காக துறைசார் வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், உள்ளிட்ட பல்வேறு நிபுணர்களிடம் குழு கலந்துரையாடி வருகின்றது.

நாட்டில் இடம்பெறும் விடயங்கள் குறித்து முறையான விசாரணையின்றி அதன் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்த முன்னரே முறையற்ற விதத்தில் பல்வேறு சமூக ஊடகங்களில் அவை பகிரப்படுகின்றன. இதன் காரணமாக நாட்டில் மோதல்கள் உட்பட பல அசம்பாவிதங்கள் இடம்பெறுவது மாத்திரமன்றி சமூக அந்தஸ்துள்ள பலரின் நற்பெயருக்கு கலங்கமும் ஏற்படுகின்றது.

எனவே, சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த முறையான பொறிமுறையொன்று அவசியமாகும். பொலிஸார் உரிய முறையில் தமது பணிகளைச் செய்கிறார்களா என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கும் போதைப்பொருள் நாட்டிற்குள் நுழைவதை தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்ப சில தந்திரங்களைக் கையாண்டு நேர்மையுடன் செயல்பட்டால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு ஊடக நிறுவனங்களின் ஆதரவும் தேவை. ஊடகங்களும் சரியான பொறுப்புணர்வோடு செயற்பட்டால் இந்த நாட்டிற்கு ஒரு பெரும் பணியைச் செய்யு வாய்ப்பு உள்ளது - என்றார்.

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

அதேபோல் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்தை இணையத்தின் ஊடாக திறந்துவைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில்லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபாவாக அதிகரித்துக்கொள்வதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்திய அரசு வழங்கவுள்ளதோடு அதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

அதன்கீழ் வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டங்கள், அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள், பொலன்னறுவையில் பல்லின - மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத்தில் மழைநீரை சேகரிக்கும் வேலைத் திட்டத்தின் கீழான 2889 நிர்மாணிப்புக்கள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான 5000 மெற்றிக்தொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை பிரிவொன்றை நிறுவுதல் உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளன.

அதேபோல் இலங்கையின் தேசிய பாலுற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனமான (அமுல் குழுமம்) மற்றும் இலங்கையின் காகீல்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பாலுற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ள கூட்டு வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் பலனாக கைசாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கான நிதிஉதவிகள் கிடைக்கவுள்ளன. அத்தோடு, முதல் ஐந்து வருடங்களில் பால் உற்பத்தியை 53 சதவீதத்தினால் அதிகரித்துக்கொள்ளவும் 15 வருடங்களில் இலங்கையை பாலுற்பத்தியில் தன்னிறைவான நாடாக மாற்றும் நோக்கத்துடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் கீழ் கால்நடைகளுக்கு அவசியமான உயர்தர மருந்துகள் மற்றும் உணவு, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி 2 இலட்சம் பாலுற்பத்தியாளர்களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையை டிஜிட்டல்மயமாக்குதல், பால் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பங்களுக்கான முதலீடுகள் மற்றும் பால்சார்ந்த உற்பத்திகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரதிபலன்கள் கிட்டும். இதன்போது இலங்கை - இந்திய உறவுகளுக்கு 75 வருடம் பூர்த்தியாவதையிட்டு விசேட நினைவுச்சின்னமொன்றும் வெளியிடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் புனீத் அகர்வால் ஜே.பீ.சிங், இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரகூ புரி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருட்கள் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை நேற்று விடுத்த அவர் இதனைத் தெரிவித்தார்.

கொள்முதல் மற்றும் பதிவு முறையற்ற, தரம் குறைந்த ஐ.ஏ.வி.ஐ. என்ற மருந்துப்பொருட்கள் சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இந்நாட்டில் பல நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது நேரடியாக நரம்புக்குள் செலுத்தப்படும் ஒரு மருந்து. முக்கியமாக நரம்பியல் வலியைக் குறைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

மேலதிகமாக இம்மருந்து மூட்டுகள் மற்றும் இதய நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தொடர்புடைய வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த மருந்துகள் கிடைக்காவிட்டால் சில நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. மயஸ்தீனியா கிராவிஸ் (னிதீழிவிமிஜூஎஜஷ்ழிறூஷழிஸஷ்வி) எனும் நோய் தீவிரமடையும் போதும் இந்த மருந்தே பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் இந்த தரக்குறைவான மருந்து கொடுக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாட்டின் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் தலைமையிலான ஆட்சியின் பதில் என்னவாக இருக்கிறது என கேள்வி எழுப்புகிறேன். இந்த ஆட்சி தனது நட்பு வட்டார முதலாளித்துவத்தை முதன்மைப்படுத்தி அரசியல் சூதாட்டங்களை நடத்தி வருகிறது.

தேர்தலை நிறுத்தும் அரசியல் மோசடிகளில் ஈடுபட்டு நாட்டு மக்களை சாவுப் படுக்கைக்கு கொண்டு செல்கின்றது. இந்த மோசடிக்கு ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும். ஊழல் மிக்க சுகாதார அமைச்சரை இப்போதே ஜனாதிபதிக்கு நீக்க முடியும் என்றாலும், ஜனாதிபதி அதைச் செய்யமாட்டார்.

இந்த ஆட்சி மக்கள் மீது வரிகளைச் சுமத்தி மருந்துப்பொருள் கடத்தல் மூலம் நாட்டுக்கு பெருமளவு பணத்தை இழக்கச் செய்திருக்கிறது. இவ்வாறான கீழ்த்தரமான வேலைகளில் ஈடுபடுவதை விடுத்து இதற்குக் காரணமான சுகாதார அமைச்சரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் - என்றார்.

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.


**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

## தொழிலாளர்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சாத்தியமான அனைத்து நட வடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் நாடு திரும்ப விரும்பும் இலங்கையர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கை பணியாளர்கள் தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்கு 07166 40560 எனும் வட்ஸ்அப் இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## அரசின் பசுமைப் ....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செயற்பட்டுவதன் காரணமாக இந்த நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவார்கள் என நாம் நம்புகின்றோம்.

இந்த திட்டத்தின் முக்கிய அங்கம் நமது பொருளாதார நவீனமயமாக்கல் ஆகும். மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகியவை அதன் முக்கிய பகுதிகளாகும். டிஜிட்டல் பொருளாதாரம் பற்றி பேசினால், நாம் முன்னோக்கிச் செல்லும் போது பல விடயங்களை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

அதன்போது, தகவல் தொழில்நுட்பத்தில் அறிவும் பயிற்சியும் கொண்ட மனித வளம் தேவை. அந்த படைப்பலத்தைக் கட்டியெழுப்ப நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

நாங்கள் புதிய பல்கலைக்கழக கட்டமைப்பொன்றை ஆரம்பிப்போம். அதன்போது, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொறிமுறைப்படி அரசாங்கம் 03 பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளது. மேலும், அரச சார்பற்ற பல்கலைக் கழகங்களை தொடங்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஹார்வர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் போன்று இலாபத்தை மீண்டும் பல்கலைக்கழகத்தில் முதலீடு செய்யும் குழுவுடன் அந்த நடவடிக்கைகளை தொடர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எப்படியிருந்தாலும், இந்த புதிய தொழில்நுட்ப அறிவை வழங்க பல புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ எதிர்பார்த்துள்ளோம். இரண்டாவதாக, தற்போதுள்ள 450 தொழிற்பயிற்சி மையங்களை இணைத்து தொழிற்கல்லூரிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில் பயிற்சி நவீனமயமாக்கப்படவுள்ளது. இவை அனைத்தையும் செய்யும் அதே வேளை, பாடசாலைகளுக்கும் இந்த புதிய தொழில்நுட்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலம் தொழில்நுட்பம் மற்றும் பசுமைத்துறை என்பவற்றில் தங்கியுள்ளது. எனவே நாம் அதற்குள் செல்ல வேண்டும்.

நெல் விளைச்சல் வெற்றி பெறாத போது, கறுவா விளைச்சலுக்கு சென்றோம். கறுவாவை இழந்த போது கோப்பி பயிரிடப்பட்டது. கோப்பி இல்லாத காலத்தில் தேயிலை, இறப்பர் தென்னை ஆகியன பயிரிடப்பட்டன. இப்போது நாங்கள் சுற்றுலாத் துறை மற்றும் ஆடைத் தொழில் செய்கிறோம். இவை அனைத்தும் கடந்த காலத்தைச் சேர்ந்தவை.

ஆனால் நாம் எதிர்காலத்திற்கு செல்ல வேண்டும். அதற்காக முடிந்தவரை பல்வேறு குழுக்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். இந்த நாட்டின் தேவையை விட இரண்டு மடங்கு மக்களை நாம் உருவாக்க வேண்டும். சிலர் வெளிநாடு செல்கிறார்கள். அவர்கள் நம் நாட்டுக்கு அன்னியச் செலாவணியை அனுப்புகிறார்கள்.

ஜப்பான், சீனா மற்றும் தென் கொரியா போன்ற கிழக்கு ஆசியாவின் மக்கள் தொகை வேகமாக குறைந்து வருகிறது. எனவே அனைவரும் இணைந்து முன்னேறுவோம். புதிய பல்கலைக்கழகங்களில் நீங்கள் இணையலாம். மேலும், தொழில்முறை மையங்களில் இந்த திட்டங்களை செயல்படுத்துவதற்கான வாய்ப்புகளை நீங்கள் வழங்கலாம்.

இந்த அறிவை பாடசாலைகளுக்கு கொண்டு செல்வதில் நாம் இணைந்து பணியாற்றலாம். அதற்கு நீங்கள் தயாரா இல்லையா என்பதே எனது கேள்வி. பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க இந்தப் பணிகளுக்கு தலைமையேற்றுள்ளார். அந்தந்த அமைச்சுகளின் செயலாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தொழில்நுட்பத்துடன் புதிய தொழிற்சாலைகள் உருவாகும்போது, புதிய தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. இன்று பலர் வேலை இழந்துள்ளனர் அவ்வாறான இளைஞர்களுக்கு இந்த அறிவை வழங்க முடியும். அவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் முடியும். அதற்கான உங்கள் பதிலைக் கூறுங்கள் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்க இராஜதந்திரிகளுடன் மக்கள் முன்னணியினர் சந்திப்பு



ஐக்கிய அமெரிக்காவின் இராஜதந்திர அதிகாரிகளைத், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி திருமதி வாசுகி சுதாகர், மகளிர் அணிச்செயலாளர் கிருபா கிரிதரன் மற்றும் முன்னணியின் ஊடகப்பேச்சாளர், சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் ஆகியோ-ார் புதன்கிழமை சந்தித்து, தமிழினத்தின் அபிலாசை-களையும் அவலங்களையும் வலியுறுத்தினர்.(05)

## காலி முகத்திடலில் மீட்ட சடலம் பிக்குவுடையது எனச் சந்தேகம்

கொழும்பு காலி முகத்திடல் கடற்கரையில் இனந்தெரியாத நபரின் சடலம் ஒன்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

35 முதல் 40 வயதுடைய ஆண் ஒருவருடையது என சந்தேகிக்கப்படும் இந்த சடலம் மொட்டையடிக்கப்பட்ட தலையுடன் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பிக்குகள் அணியும் காவி நிற உடை ஒன்றையும் சடலத்தின் அருகிலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் பௌத்த துறவியாக இருக்கலாமெனக் கருதப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## அசிட் வீச்சுக்குள்ளான தந்தையும் மகளும் வைத்தியசாலையில்

முல்லேரியா, அம்பத்தலையில் அசிட் வீச்சுக்குள்ளான தந்தையும் மகளும் கொழு-ம்பு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தபோதே தந்தை மற்றும் மகள் மீது, வீதியில் நின்ற சந்தேக நபர் அசிட் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என முல்லேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்த மகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிலும், தந்தை கொழும்பு கண் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கைக்குண்டுடன் ஒருவர் நெல்லியடியில் கைது!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி துண்ணாலை பகுதியில், நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பாட்டார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும், இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் குறித்த நபருக்கு தொடர்பு இருப்பதாகவும், வவுனியாவைச் சேர்ந்த நபர் நீண்ட காலமாக துண்ணாலை பகுதியில் வசித்து வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, அல்வாய் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நெல்லியடி பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## உணவு ஒவ்வாமையால் பாதிப்புற்ற 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள்

### பண்டாரவளையில் சம்பவம்

உணவு ஒவ்வாமை காரணமாக பாதிக்கப்பட்ட பண்டாரவளை - தூல்கொல்ல பிரதேச பாடசாலை ஒன்றின் 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் வழங்கப்பட்ட உணவே இந்த ஒவ்வாமைக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமை இடம்பெற்ற இந்தச்சம்பவம் தொடர்பில் சுகாதார பரிசோதகர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## பருத்தித்துறை பொலிஸ் நிலைய பெண் கான்ஸ்டபிள் விபத்தில் சாவு

அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதியில் தலகிரியாகம பகுதியில் மோட்டார் சைக்கிளும் ரிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், உயிரிழந்துள்ளனர் என தலகிரியாகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச்சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 24 வயதான பெண் பொலிஸ் கான்ஸ்டபிளான இவர் விடுமுறையில் வீடு வந்திருந்தபோதே இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

ரிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தல்கிரியாகம பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பாலஸ்தீன் - இஸ்ரேல் மோதல் பேரழிவுகளை ஏற்படுத்தும்

### அமைச்சர் டக்ளஸ் ஆரூடம்

பேரழிவுகளையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்ற பாலஸ்தீன் - இஸ்ரேல் யுத்தம் தொடர்பாக கரிசனையை வெளிப்படுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிமையும் சமாதானமும் பாலஸ்தீனத்தில் நிலவ வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், பாலஸ்தீன் - இஸ்ரேல் விவகாரத்தின் போக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் என்ற யதார்த்தத்தினை 1978 ஆம் ஆண்டு அங்கு பயிற்சிக்கு சென்ற போதே தன்னால் உணரக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

பாலஸ்தீன மக்களின் உணர்வுகளையும் ஆழ்மன விருப்பங்களையும் நான் நேரில் கண்டிருக்கிறேன். அங்கு நான் ஆயுதப்பயிற்சி எடுத்த வேளை அவர்களது போராட்டத்தில் கூட பங்கெடுத்திருக்கிறேன்.

எமது மண்ணிலும் நானிருந்த எமது அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பே கண்காட்சிகளை நடத்தி பாலஸ்தீன விடுதலைக்கு பகிரங்க ஆதரவை தெரிவித்திருந்தது.



போர் வெறியர்களாக அவர்கள் போராட புறப்பட்டவர்கள் அல்லர்.

ஒரு கையில் ஒலிவ் மரக் கிளையும் மறு கையில் ஆயுதமும் ஏந்தியுள்ளோம். எது வேண்டும் என்று யசீர் அரபாத் எழுப்பிய கேள்வி சகலரையும் ஈர்த்திருந்தது.

ஒலிவ் மரக்கிளை அங்கு சமாதானத்தின் சின்னம், அத்தகைய வழிமுறையே சிறந்ததென நானும் கருதியவன், ஆனாலும் அன்றே நான் நினைத்திருந்தேன் அவர்களது பயணத்திலும் மாற்றங்கள் தேவையென்று. பாலஸ்தீனத்தை பாடமாக ஏற்று எமது போராட்டத்தை நடத்த வேண்டும் என்று நான் அன்று கருதியதுண்டு. பாலஸ்தீன மக்களும் இன்று எமது போராட்ட படிப்பினைகளை வைத்து பயணிக்க வேண்டும்.

போர் மேகங்கள் அங்கு சூழ்ந்துள்ளன. எந்த தரப்பும் பொது மக்களை பாதுகாப்பதில் அக்கறை காட்ட வேண்டும்.

இதேவேளை பாலஸ்தீன மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நிரந்தர சமாதானம் அங்கு நிலவ வேண்டும். மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமென்ற உரிமம் பாலஸ்தீனத்தில் மட்டுமல்ல எங்கும் நிலவ வேண்டும் என்று தெரிவித்தார்.

அதேவேளை, பலஸ்தீன விவகாரத்தை போன்றே எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு சரியான வழிமுறையை முன்கூட்டியே- 30 வருடங்களுக்கு முன்னர் தன்னால் முன்மொழியப்பட்ட போது ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் தற்போது, பேரழிவுகளுக்கு பின்னர் ஏற்றுக்கொண்டிருப்பதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார்.

மேலும், ஆசிரியர் கலாசாலையின் பயிற்சி ஆசிரியர்களும் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு எமது எதிர்கால சந்ததியினரை சரியாக வழிநடத்த வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்தார். (05)




## லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப் பிரம்புதினம்

லயன்ஸ் கழகங்களும் வாழ்வக சமூகமும் இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப் பிரம்புதினம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை லயன்ஸ் கழக வெள்ளைப் பிரம்புதின இணைப்பாளர் லயன் மகாதேவா பிரிதுவிராஜா தலைமையில் நடைபெற உள்ளது.

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம். பீற்றர் - லயன் சாவித்திரி பீற்றர் ஆகியோர் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் கொமர்சல் வங்கிக்கு முன்பாக விழிப்புலனற்ற சிறுவர்களுக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்பட்டு விழிப்புணர்வுப் பேரணி சுன்னாகம் சந்தியை அடைந்து அங்கிருந்து பஸ் தரிப்பு நிலையத்தைச் சென்றடைந்து அங்கு வாழ்வகத் தலைவரால் வெள்ளைப் பிரம்பு தொடர்பான விழிப்புணர்வு உரை இடம்பெற்று பின்னர் மீண்டும் சுன்னாகம் சந்தியை சென்றடைந்து வாழ்வகத்தைச் சென்று பேரணி நிறைவுபெறும்.

அதனைத் தொடர்ந்து வாழ்வக ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி அம்மாவின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர், லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட இணைப்பாளர் லயன் மா.பிரிதுவிராஜா, வாழ்வகத்தலைவர் ஆ.இரவீந்திரன் ஆகியோர் இணைத் தலைமையில் வாழ்வக அரங்கில் விழிப்புணர்வு பொதுக்கூட்டம் நடைபெறும்.

அதே நேரம் லயன்ஸ் கழகங்களால் வாழ்வகத்துக்கு சேவைத்திட்டங்களும் சகல லயன்ஸ் கழகங்களாலும் தனித்தனியாக வழங்கப்படும். மதியம் 12 மணிக்கு மதிய விருந்துடன் கூட்டம் நிறைவடையும். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2023இல் வெளியிடப்பெற்றது.